அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 29/2022

எனது இலக்கம் : EST-6/06/TVL/3040
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2022.12.17

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## தாபன விதிக்கோவையின் XIV ஆம் அத்தியாயத்தின் 30 ஆம் பிரிவை திருத்தியமைத்தல்

தாபன விதிக்கோவையின் I ஆம் தொகுதியின் XIV ஆம் அத்தியாயத்தின் 30 ஆம் பிரிவின் பால் தங்களது கவனத்தை ஈர்க்கிறேன்.

02. அப்பிரிவை பின்வருமாறு திருத்தியமைப்பதற்கு 2022.11.14 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

**30. அரசாங்க உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய ஆட்கள்**

முறையான அதிகாரத்தின் கீழ் அழைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவொன்றின் அல்லது சபையொன்றின் கூட்டத் தொடரொன்றுக்கு, கருத்தரங்கொன்றிற்கு, குழுக் கூட்டமொன்றிற்கு அல்லது திணைக்கள விசாரணையொன்றிற்கு வருகை தருமாறோ அல்லது இங்கு 26 ஆம் பிரிவினால் மேவப்படாத ஏதேனுமொரு கடமையை சம்பளமின்றி ஆற்றுமாறோ அரசாங்க உத்தியோகத்தரல்லாத நபரொருவர் தேவைப்படுத்தப்படுமிடத்து, அதற்காக அந்நபரினால் ஏற்கப்படும் பிரயாணச் செலவுகள் இக் கோவையின் X ஆம் அத்தியாயத்தின் உரிய ஏற்பாடுகளுக்கு அமையவும், குறைந்தபட்ச இணைந்த படியின் பெறுமானத்தின் அடிப்படையில் வருகைக் கொடுப்பனவு இந்த அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிற ஏற்பாடுகளுக்கு உட்பட்டு செலுத்த முடியும்.

03. இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் 2022.11.14 ஆந் திகதி முதல் அமுல்நடாத்தப்படும்.

ஒப்பம்/. எம்.எம்.பி.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் :0112699399
தொலைநகல் இலக்கம் :0112692158
மின்னஞ்சல் முகவரி :ade-vi@pubad.gov.lk